**மின்சார நிலைக் கட்டணம், பீக்-ஹவர் கட்டணத்தை ரத்து செய்ய வலியுறுத்தி**

# தமிழகம் முழுவதும் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் வேலைநிறுத்தம்

**● ரூ.7,000 கோடி உற்பத்தி இழப்பு; அமைச்சர் இன்று பேச்சுவார்த்தை**

**● சென்னை**

மின்சார நிலைக் கட்டணம், பீக்-ஹவர் கட்டணத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் நேற்று வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டன. இதனால், ரூ.7,000 கோடி அளவுக்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், முதல்வரின் அறிவுறுத்தலை தொடர்ந்து, இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுடன் இன்று அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

தமிழக அரசு கடந்த ஆண்டு செப்.10-ம் தேதி மின்கட்டணத்தை உயர்த்தியது. இதில், குறு, சிறு, நடுத்தர தொழில் (எம்எஸ்எம்இ) நிறுவனங்களுக்கு நிலைக் கட்டணம் ரூ.550 ஆக இருமடங்கு உயர்த்தப்பட்டது. அதேபோல, பீக் ஹவர் கட்டணமும் 25 சதவீதம் உயர்த்தப்பட்டது.

தமிழகம் முழுவதும் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட எம்எஸ்எம்இ நிறுவனங்கள் உள்ள நிலையில், இந்த கட்டண உயர்வால் தாங்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதாகவும், உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை குறைக்க வேண்டும் என்றும் இந்த நிறுவனங்கள் சார்பில் தமிழக அரசுக்கு தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டது.

ஆனால், இந்த கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததால், உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை குறைக்க கோரி தமிழகம் முழுவதும் செப்.25-ம் தேதி (நேற்று) ஒரு நாள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எம்எஸ்எம்இ நிறுவனங்கள் அறிவித்தன.



↑ மின்கட்டண உயர்வை குறைக்க வலியுறுத்தி கோவையில் நேற்று கதவடைப்பு போராட்டம் நடந்தது. பாப்பநாயக்கன்பாளையம் பகுதியில் செயல்படும் தொழில் நிறுவனத்தில் உற்பத்தி நிறுத்தம் செய்யப்பட்டதால் தொழிலாளர்கள் இன்றி வெறிச்சோடி காணப்பட்டது. படம்: ஜெ.மனோகரன்

இதையடுத்து, முதல்வர் ஸ்டாலின் சிறு தொழில் நிறுவனங்களுக்கான மின்கட்டண முறைகளை மாற்றியமைத்து சமீபத்தில் உத்தரவிட்டார்.

ஆனால், இதிலும் தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்று கூறி, எம்எஸ்எம்இ நிறுவனங்கள் திட்டமிட்டபடி தமிழகம் முழுவதும் நேற்று வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டன. இதனால், உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டது.

சென்னை கிண்டியில் தமிழ்நாடு தொழில் துறை மின்நுகர்வோர் சங்கம் சார்பில் கவனஈர்ப்பு கூட்டம் நடைபெற்றது. இதுகுறித்து சென்னை மாவட்ட சிறு, குறுந் தொழில் சங்க ஒருங்கிணைப்பாளர் கே.சந்திரகுமார் கூறியதாவது:

தொழில் துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. நாட்டின் தொழில் வளர்ச்சியை அடுத்த தளத்துக்கு கொண்டு செல்வதில் எம்எஸ்எம்இ நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன.

இந்த நிலையில், மின்கட்டண உயர்வால் இந்த நிறுவனங்கள் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றன. இதுகுறித்து, அரசிடம் பல முறை முறையிட்டும் தீர்வு கிடைக்கவில்லை. மேலும், அடிக்கடி உயர்த்தப்படும் மின்கட்டண உயர்வால் சிறு, குறுந்தொழில் நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தில் உள்ளன.

குறிப்பாக, தமிழ்நாடு மின்வாரியம் உயர்த்தியுள்ள 430 சதவீத நிலைக் கட்டணத்தை திரும்ப பெற வேண்டும். பீக்-ஹவர் கட்டணம் 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. எனினும் இது பெரும் சுமையாக இருப்பதால், இதை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.

சோலார் மேற்கூரை நெட்வொர்க் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் அதுபோல், 12 கிலோ வாட் வரை மின்சார இணைப்பு பெற்றுள்ள எம்எஸ்எம்இ நிறுவனங்களுக்கு 3-பி அட்டவணைக்கு பதிலாக 3-ஏ என்ற அட்டவணை மூலம் மாதம்தோறும் மின்கட்டணம் வசூலிக்க வேண்டும். இதன்மூலம் உற்பத்தி செலவு குறையும். வெல்டிங் இணைப்புகளை 3-பி என்ற சிறப்பு அட்டவணையில் இருந்து 3-ஏ அட்டவணைக்கு மாற்ற வேண்டும்.

மேலும், பல்முனை ஆண்டு மின் கட்டண அட்டவணையை ரத்து செய்ய வேண்டும். 2 ஆண்டுகளுக்கு மின்கட்டணத்தை உயர்த்த கூடாது என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தமிழகம் முழுவதும் எம்எஸ்எம்இ நிறுவனங்கள் தற்போது (நேற்று) வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. இந்த வேலைநிறுத்த போராட்டம் காரணமாக தமிழகம் முழுவதும் ரூ.7,000 கோடி அளவுக்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இதேபோல, கோவை மாவட்டத்தில் நடைபெற்ற கதவடைப்பு போராட்டத்தால் 50 ஆயிரம் தொழில்நிறுவனங்கள் நேற்று மூடப்பட்டன. ரூ.1,000 கோடிக்கு மேல் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளதாக தொழில் துறையினர் தெரிவித்தனர். எம்எஸ்எம்இ நிறுவனங்கள் அதிகம் செயல்படும் கணபதி, சிட்கோ, இடையர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன.

இதற்கிடையே, இப்பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறு குறு, சிறு, நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசனிடம் முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். இதையடுத்து, எம்எஸ்எம்இ நிறுவன உரிமையாளர்கள், பிரதிநிதிகளுடன் அமைச்சர் இன்று பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**



# எல்லைமீறும் ஊடகப் பிழைகள்

ச.கோபாலகிருஷ்ணன்
தொடர்புக்கு: gopalakrishnan.sn@hindutamil.co.in

பிரபல நடிகர்–இசையமைப்பாளரின் 16 வயது மகள் தற்கொலை செய்துகொண்டதை ஊடகங்கள் செய்தியாக்கிய விதம் பெரும் வருத்தத்தையும் கோபத்தையும் பல்வேறு தரப்பினரிடம் ஏற்படுத்தியுள்ளது. திரைத் துறைப் பிரபலங்களோ அவர்களின் குடும்ப உறுப்பினர்களோ காலமாகும்போது 24 மணி நேர செய்தித் தொலைக்காட்சி அலைவரிசைகள், யூடியூப் அலைவரிசைகள் உள்ளிட்ட காட்சி ஊடகங்கள் துக்க வீட்டு நிகழ்வு ஒவ்வொன்றையும் நொடிக்கு நொடி நேரலை செய்வது இது முதல் முறையல்ல; இறந்தவருக்கான கண்ணியத்தையும் அவருடைய குடும்பத்தின் அந்தரங்க உணர்வையும் துச்சமென மதித்துச் செயல்படுவதும் புதிதல்ல. ஆனால், இந்த முறை உயிரிழந்தவர் ஒரு சிறுமி என்பதும் அவரது மரணம் ஒரு தற்கொலை என்பதும் இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை அதிகரித்து இருப்பதோடு, இதற்குப் புதுப் பரிமாணங்களையும் இணைத்துள்ளன.

**கைவிடப்படும் விதிமுறைகள்:** இந்தச் சிறுமியின் இறப்புச் செய்தியைத் தமிழின் சில முன்னணி செய்தி அலைவரிசைகள் வெளியிட்ட விதமே பல வகைகளில் பிரச்சினைக்குரியது. முதலில் இந்தச் செய்தியை வெளியிட்டவர்கள் இறந்த சிறுமியின் பெயருக்குப் பதிலாக அவரது தங்கையின் பெயரை அவருடைய பெயராகத் தவறாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இது செய்தி வெளியாகி சில மணி நேரம் கழித்துத்தான் தெரியவந்தது. அனைவரையும் முந்திக்கொண்டு செய்திகளைத் தருவதற்கான அவசரத்தில் இறந்தவரின் பெயரைக் கூடச் சரிபார்த்து உறுதிப்படுத்திக்கொள்ளத் தவறியிருக்கிறார்கள். பதின்பருவத்தில் சகோதரியை இழந்த அந்தப் பெண்ணுக்கு அதில் தன் பெயர் தவறுதலாக இடம்பெற்றது எவ்வளவு வலியை ஏற்படுத்தியிருக்கும்?

சில முன்னணிக் காட்சி, இணைய ஊடகங்கள் இந்தத் தற்கொலையைச் செய்தியாக்கிய விதமும் பிரச்சினைக்குரியது. பிரபலங்களுக்கு நெருக்கமானவர்களின் மரணம் தொடர்பான செய்திகள் பெற்றுத் தரும் கவன ஈர்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் முனைப்பில், தற்கொலை தொடர்பான செய்தி வழங்கலுக்கான விதிமுறைகள் அனைத்தும் காற்றில் பறக்கவிடப்பட்டன. 18 வயதுக்கு உட்பட்டவர் தற்கொலை செய்துகொண்டால் அவருடைய பெயர், ஒளிப்படம் உள்ளிட்ட இறந்தவரின் அடையாளங்களைத் தெரிவிக்கக் கூடாது; தற்கொலைக்கான காரணத்தை ஊகத்தின் அடிப்படையில் சொல்லக் கூடாது; தற்கொலைக் கடிதத்தைக் காண்பிக்கவே கூடாது; இளைஞர்கள் – குழந்தைகள் தற்கொலை செய்துகொண்டால் அதை முதன்மைச் செய்தியாக வெளியிடக் கூடாது என தற்கொலைகளைச் செய்தியாக்குவது தொடர்பாகப் பல விதிமுறைகள் இருக்கின்றன.

தற்கொலை செய்துகொள்ளும் மனநிலையில் இருப்பவர்கள், தற்கொலை தொடர்பான செய்திகளால் அந்த முடிவை நோக்கி உந்தப்படக் கூடாது என்பதற்காகத்தான் இதுபோன்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதுவும் பதின்பருவத்தினரின் தற்கொலைகளுக்குச் செய்திகளில் முக்கியத்துவம் அளிப்பது, அதே வயதில் இருக்கும் சிலரை அதேபோல் செய்யத் தூண்டும் ஆபத்தையும் உள்ளடக்கியது.

இதைப் பற்றி எல்லாம் துளிக்கூட அக்கறை இல்லாமல்தான் இந்தச் சிறுமியின் தற்கொலை தொடர்பான செய்திகள் அன்றைய நாள் முழுவதும் ஒளிபரப்பப்பட்டன. அவருடைய பெயர், ஒளிப்படம், குடும்பத்துடன் இருக்கும் ஒளிப்படம் ஆகியவை காண்பிக்கப்பட்டன. அவர் தற்கொலைக்கான காரணம் குறித்த புலன் விசாரணையிலும் சில ஊடகங்கள் இறங்கின.

பொதுவாக, திரைப்படப் பிரபலங்களின் குடும்ப உறுப்பினர்கள் இறந்துவிட்டால் செய்யப்படுவதுபோல், அன்றைக்கு அந்தச் சிறுமியின் சடலம் மருத்துவமனையிலிருந்து ஆம்புலன்ஸில் எடுத்துவரப்படுவது தொடங்கி இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்படுவது வரை அனைத்தையும் சில அலைவரிசைகள் ஒளிபரப்பின. அஞ்சலி செலுத்த வந்தவர்களைச் சூழ்ந்துகொண்டு, இறந்த சிறுமி பற்றிய கேள்விகளால் நிருபர்கள் அவர்களைத் துளைத்தெடுத்தனர். அஞ்சலி செலுத்திவிட்டு கண்ணீருடன் வெளியே வந்த ஒரு ஆசிரியையை வழிமறித்த செய்தித் தொலைக்காட்சி ஊடகர் ஒருவர், அவரிடம் விசாரணை நடத்துவதுபோல் கேள்விகளைக் கேட்கும் காணொளி சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்டுக் கடும் கண்டனத்துக்கு உள்ளானது.

இந்தச் சிறுமி மறைவதற்குச் சில நாள்களுக்கு முன்பு நிகழ்ந்த நடிகர் மாரிமுத்துவின் மரணத்தின்போதும் ஊடகங்கள் நடந்துகொண்ட விதம் கவலைக்குரியதாகவே இருந்தது. மாரிமுத்து நடித்துக்கொண்டிருந்த நெடுந்தொடரின் இயக்குநர், மாரிமுத்துவுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு வெளியே வந்தபோது, "மாரிமுத்துவின் கதாபாத்திரத்தில் இனி யார் நடிப்பார்?" என்று ஓர் ஊடகர் கேட்டார். ஊடக விதிமுறைகள் மட்டுமல்ல, துக்க வீட்டில் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை நாகரிகத்தை மீறுவதற்குக்கூடச் சில ஊடகர்கள் தயங்குவதில்லை என்பதையே இதுபோன்ற நிகழ்வுகள் காண்பிக்கின்றன.

**பிழை குறித்த கவலையின்மை:** மாரிமுத்து மறைவதற்கு ஒரு சில நாள்களுக்கு முன்பு நடிகை திவ்யா ஸ்பந்தனா மாரடைப்பால் இறந்துவிட்டதாகச் சமூக ஊடகங்களில் வெளியான வதந்தியின் அடிப்படையில், முன்னணித் தமிழ் செய்தித் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது. அடுத்த சில நிமிடங்களுக்குள் வேறு சில செய்தித் தொலைக்காட்சிகளும் சில இணைய ஊடகங்களும் இந்தப் பிழையான செய்தியை வெளியிட்டுவிட்டன. இது போலிச் செய்தி என்பது சற்று நேரத்தில் உறுதியாகிவிட்டது. ஒருவரின் மரணம் குறித்த செய்தியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான எந்த வழிமுறைகளையும் பின்பற்றாமல் தவறாகச் செய்தி வெளியிட்ட ஊடகங்கள், உண்மை தெரிந்தவுடன் அந்தத் தவறான செய்திகளுக்கான இணைய இணைப்புகளையும் காணொளிகளையும் நீக்கிவிட்டன. தவறான செய்தி வெளியிடப்பட்டதற்கான தடயங்கள் அழிக்கப்பட்டன.

ஆனால், தவறுகளிலிருந்து பெரும்பாலானோர் பாடம் கற்பதாகத் தெரியவில்லை. இந்த மாதத் தொடக்கத்தில் இஸ்ரோ ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தைச் சேர்ந்த அறிவிப்பாளர் வளர்மதி இறந்த செய்தியை அந்நிறுவனத்தைச் சேர்ந்த முன்னாள் விஞ்ஞானியும் திட்ட இயக்குநருமான வளர்மதி இறந்துவிட்டதாகத் தவறாகச் சில அச்சு ஊடகங்களும் அவற்றின் இணைய தளங்களும் முதலில் வெளியிட்டுவிட்டன. செய்தியை முந்திக்கொடுக்கும் அவசர நோய்க்கூறு சில அச்சு ஊடகங்களுக்கும் தொற்றிவிட்டதாகத் தெரிகிறது.

உயிரோடு இருக்கும் ஒருவரை இறந்ததாகச் சொன்ன ஒரு மாதத்துக்குள், இறந்த பெண்ணின் பெயரைத் தவறாகத் தெரிவித்த அவலம் நேர்ந்திருக்கிறது. தவறான இறப்புச் செய்திகளை வெளியிடுவது, இறந்தவர் தொடர்பான தவறான தகவல்களைத் தருவது போன்றவற்றைத் தவிர்ப்பதற்கான எந்த அடிப்படை நெறிமுறைகளோ, அக்கறையோ பலரிடம் இல்லை. இத்தகைய தவறுகள் எவ்வளவு மோசமான தாக்கத்தை விளைவிக்கக்கூடியவை என்பது குறித்த புரிதலும் இல்லை.

**நம்பிக்கை தரும் எதிர்வினைகள்:** நடிகர்–இசையமைப்பாளரின் மகள் தொடர்பான ஊடகங்களின் செயல்பாட்டுக்கு எதிராகக் கடுமையான விமர்சனமும் கண்டனங்களும் எழுந்தது கவனிக்கத்தக்கது. இதையடுத்து, முன்னணி யூடியூப் அலைவரிசை நிறுவனம் ஒன்று, இனிமேல் பிரபலங்களின் துக்க வீட்டு நிகழ்வுகளை நாங்கள் செய்தியாக்க மாட்டோம் என்றும் அதிகாரபூர்வ இரங்கல் கூட்டங்கள், அஞ்சலி நிகழ்ச்சிகளை மட்டுமே செய்தியாக வெளியிடுவோம் என்றும் அறிவித்துள்ளது.

தென்னிந்திய நடிகர் சங்கம் இந்த விஷயத்தில் ஊடகத்தினர் சுயகட்டுப்பாடுகளை வகுத்துக்கொள்ள வேண்டும்; அரசு இதைக் கண்காணிக்க வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டுள்ளது. தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் ஊடகங்களின் செயல்பாட்டைக் கண்டித்திருப்பதோடு, துக்க வீடுகளில் சம்பந்தப்பட்டவர்களின் அனுமதி இல்லாமல் ஊடகங்கள் நுழைவது தடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. இது போன்ற எதிர்வினைகள் மாற்றம் குறித்த நம்பிக்கையை விதைக்கின்றன; ஆனால், இது மட்டும் போதாது.

**அணுகுமுறை மாற்றம்:** செய்திகளை உடனடியாகக் கொடுப்பதைவிட, சரியாகக் கொடுப்பதே தலையாய கடமை என்பதை ஊடகத் துறையில் உள்ள அனைவரும் உணர வேண்டும். பிரபலங்கள் வீடுகளில் மரணம் நிகழும்போது இறந்தவர்களைப் பிரபலம் அல்லது பிரபலத்தின் உறவினராகப் பார்க்காமல் மனிதராகப் பார்த்து, இறந்தவருக்கு உரிய கண்ணியத்துக்கும் உறவைப் பறிகொடுத்தவர்களின் துக்கத்துக்கும் மரியாதை அளிக்கும் மனநிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும். மக்களும் செய்திகளை நுகர்வதிலும் பிறருடன் பகிர்ந்துகொள்வதிலும் அவசரம் காண்பிக்காமல் சரியான செய்திகளை மட்டுமே தரும் ஊடகங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அவற்றை ஆதரிக்க வேண்டும். தவறு செய்யும் ஊடகர்களைக் கட்டம்கட்டி சமூக ஊடகங்களில் வசைபாடுவதைவிடச் செய்திகளை வழங்குவோரும் அவற்றை நுகர்வோரும் செய்தி, ஊடகம் ஆகியவை தொடர்பான அணுகுமுறையை மாற்றிக்கொண்டால் மட்டுமே மாற்றங்களைக் காண முடியும்.

**தற்கொலை எண்ணம் ஏற்பட்டால், அதிலிருந்து விடுபட கீழ்க்கண்ட எண்களைத் தொடர்புகொள்ளலாம்:**
**தமிழ்நாடு அரசின் உதவி எண்: 104 (24*7)**
**சிநேகா தொண்டு நிறுவனத்தின் உதவி எண்: 044 2464 00 60**

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நாடாளுமன்றத்திலும் வெறுப்புப் பேச்சு: முளையிலேயே கிள்ளப்பட வேண்டும்!

இந்தியாவின் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தொடர், 'வரலாற்றுச் சிறப்புமிக்க' பல நிகழ்வுகளுடன் நிறைவடைந்திருக்கிறது. நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மகளிருக்கான 33% இடஒதுக்கீட்டு மசோதா நிறைவேற்றப்பட்டது ஒரு வரலாற்றுத் தருணம் என்றால், தெற்கு டெல்லி பாஜக மக்களவை உறுப்பினரான ரமேஷ் பிதுரி, சக உறுப்பினரான பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த டேனிஷ் அலி மீது ஏவிய வெறுப்புப் பேச்சு ஒரு பெரும் இழுக்காக அமைந்துவிட்டது. இஸ்லாமியரான அலி மீது பிதுரி நிகழ்த்திய வகுப்புவாதத் தாக்குதலை, ஆளும் பாஜக-வைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்கள் சிலர் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது மிக மோசமான போக்கு.


புதிய கட்டடத்துக்கு மாறியபோது, நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு புதிய வரலாற்றின் தொடக்கத்துக்கு அழைப்புவிடுத்த பிரதமர் நரேந்திர மோடி, "புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஊக்கம் தருவதாக அமைய வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார். இந்நிலையில்தான், பாஜகவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரே பிரதமரின் பேச்சுக்கு எதிர்மறையாக – அதுவும் முதல் அமர்வில் – நடந்துகொண்டிருப்பது, புதிய நாடாளுமன்ற வரலாற்றில் அழிக்க முடியாத கறையாகப் படிந்துவிட்டது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் செயல்பாடுகளில் சிறு வயதிலிருந்தே தன்னை ஈடுபடுத்திக்கொண்ட பிதுரி, அதன் மாணவர் அமைப்பான ஏபிவிபி-யில் கல்லூரிக் காலத்தில் உறுப்பினராக இருந்தவர். தெற்கு டெல்லி தொகுதியிலிருந்து 2009இல் முதல் முறையாக மக்களவைக்குப் பாஜக சார்பில் போட்டியிட்ட பிதுரி, அத்தேர்தலில் தோல்வியடைந்தார். எனினும் 2014, 2019 தேர்தல்களில் அதே தொகுதியில் வெற்றிபெற்று மக்களவைக்குச் சென்ற பிதுரி, வெறுப்புப் பேச்சுகளுக்காக அறியப்பட்ட ஒருவர் ஆவார். தெற்கு டெல்லியின் துக்ளகாபாத் பகுதியைச் சேர்ந்தவரான பிதுரிக்கு, அப்பகுதி இளைஞர்களிடையே பலத்த ஆதரவு உண்டு.

பிதுரியின் தற்போதைய பேச்சுக்கு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் உள்பட பொதுச் சமூகத்திலிருந்தும் கடுமையான கண்டனங்கள் எழுந்திருக்கின்றன. பிதுரி இடைநீக்கம் செய்யப்பட வேண்டும் என எதிர்க்கட்சியினர் வலியுறுத்தியபோது, இந்த விவகாரம் தீவிரமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இதுபோன்ற நடத்தை மீண்டும் நடந்தால் 'தீவிர நடவடிக்கை' எடுக்கப்படும் எனவும் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தெரிவித்துள்ளார். பிதுரி பேசியபோது அவையிலிருந்த மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பிதுரியின் பேச்சுக்கு மக்களவையில் மன்னிப்புக் கேட்டார். இந்நிலையில், 'அவை நடவடிக்கைக்குப் புறம்பான சொற்களைப் பயன்படுத்தியதற்காக' விளக்கம் கேட்டு பிதுரிக்கு பாஜக நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தின் திறப்பு விழாவில், உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அரசியல் சாசனப் பிரதிகளின் முன்னுரையில் 'மதச்சார்பின்மை', 'சமதர்மம்' ஆகிய சொற்கள் நீக்கப்பட்டிருப்பதாக மக்களவையில் காங்கிரஸ் தலைவராக உள்ள ஆதிர் ரஞ்சன் சவுத்ரி குற்றம்சாட்டியிருந்த நிலையில், பிதுரியின் வகுப்புவாத வெறுப்புப் பேச்சு புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் ஒலித்திருக்கிறது.

இத்தகைய மோசமான நிலை, நாடாளுமன்றத்தில் இனி நிகழாத வகையிலான முன்னுதாரண நடவடிக்கையை அவைத் தலைவர் எடுக்க வேண்டும். நாடாளுமன்ற அவைகளுக்கு வெளியே பொதுவெளியிலும் நா காக்க வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடமை!



↑ ஆசிய விளையாட்டில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய மகளிர் கிரிக்கெட் அணியினர்.

↑ ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் அணிகள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியினர்.

↑ ஜிம்னாஸ்டிக்ஸில் அசத்திய இந்தியாவின் பிரணதி நாயக்.

↑ 25 மீட்டர் ரேபிடு பையர் பிஸ்டல் அணிகள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய அணியினர்.

↑ படகு போட்டியில் வெண்கலம் வென்ற இந்திய அணியினர்.

ஆசிய விளையாட்டு போட்டி

## துப்பாக்கி சுடுதல், மகளிர் கிரிக்கெட்டில் தங்கப் பதக்கம் வென்றது இந்தியா

● ஹாங்சோ

ஆசிய விளையாட்டு போட்டியின் 2வது நாளான நேற்று இந்தியா 2 தங்கம் உட்பட 6 பதக்கங்களை வென்றது.

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வருகிறது. இதன் 2-வது நாளான நேற்று ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் அணிகள் பிரிவில் ருத்ராங்க்ஷ் பாட்டீல் (632.5), ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் (631.6), திவ்யான்ஷ் சிங் பன்வார் ( 629.6), ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 1893.7 புள்ளிகள் குவித்து உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றது. கொரியா அணி 1890.1 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், சீன அணி 1888.2 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும் பெற்றன.

ஆடவருக்கான 25 மீட்டர் ரேபிடு பையர் பிஸ்டல் அணிகள் பிரிவில் அனிஷ் பன்வலா, விஜய்வீர் சித்து, ஆதர்ஷ் சிங் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 1718 புள்ளிகள் குவித்து வெண்கலப் பதக்கம் வென்றது. ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவு இறுதி சுற்றில் இந்தியாவின் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் 228.8 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார். சீனாவின் ஷெங் லிஹாவோ உலக சாதனையுடன் 253.3 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கமும், தென் கொரியாவின் ஹஜுன் பார்க் 251.3 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.

### படகு போட்டி

படகு போட்டியில் இந்தியா 2 வெண்கலப் பதக்கம் வென்றது. 4 பேர் கலந்து கொள்ளும் படகோட்டத்தில் ஜஸ்விந்தர் சிங், பீம் சிங், புனித் குமார், ஆஷிஸ் கோலியன் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி நூலிழையில் வெள்ளிப் பதக்கத்தை தவறவிட்டு வெண்கலப் பதக்கம் வென்றது. பந்தய தூரத்தை இந்திய அணி 6:10.81 விநாடிகளில் கடந்து 3-வது இடம் பிடித்தது. உஸ்பெகிஸ்தான் (6:04.96) தங்கப் பதக்கமும், சீனா (6:10.04) வெள்ளிப் பதக்கமும் வென்றன. இதேபோன்று ஸ்கல்ஸ் பிரிவில் சத்னம் சிங், பர்மிந்தர் சிங், ஜகர் கான், சுக்மீத் சிங் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி பந்தய தூரத்தை 6:08.61 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கம் பெற்றது.

### மகளிர் கிரிக்கெட்...

மகளிர் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின. இதில் முதலில் பேட் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 116 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஸ்மிருதி மந்தனா 54 பந்துகளில், ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 46 ரன்களும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 40 பந்துகளில், 5 பவுண்டரிகளுடன் 42 ரன்களும் சேர்த்தனர். இலங்கை அணி சார்பில் ரனவீரா, தசனாயகா, சுலுவா ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

117 ரன்கள் இலக்குடன் பேட் செய்த இலங்கை அணியால் 8 விக்கெட்கள் இழப்புக்கு 97 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. அதிகபட்சமாக ஹாசினி 25, நிஷங்கா 23 ரன்கள் சேர்த்தனர். 19 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி தங்கப் பதக்கம் வென்றது. இந்திய அணி தரப்பில் திதாஸ் சாது 4 ஓவர்களை வீசி ஒரு மெய்டனுடன் 6 ரன்களை மட்டும் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்கள் வீழ்த்தினார். ராஜேஷ்வரி கெய்க்வாட் 2 விக்கெட்கள் கைப்பற்றினார்.

ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர்

### போபண்ணா ஜோடி தோல்வி

டென்னிஸ் போட்டியில் ஆடவருக்கான இரட்டையர் பிரிவு 2-வது சுற்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, யுகி பாம்ப்ரி ஜோடி 6-2, 3-6, 6-10 என்ற செட் கணக்கில் உஸ்பெகிஸ்தானின் செர்ஜி ஃபோமின், குமோயுன் சுல்தானோவ் ஜோடியிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தது. போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த ரோகன் போபண்ணா ஜோடி தங்கப் பதக்கம் வெல்லக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தொடக்க நிலையிலேயே வெளியேறியது ரசிகர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

மகளிருக்கான ஹேண்ட்பால் போட்டியில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் 13-41 என்ற கணக்கில் ஜப்பானிடம் தோல்வி அடைந்தது.

### கூடைப்பந்து

3X3 கூடைப்பந்து போட்டியில் ஆடவர் பிரிவில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் 20-16 என்ற கணக்கில் மலேசியாவை வீழ்த்தியது. சி பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய அணி தனது அடுத்த ஆட்டத்தில் மக்காவோ அணியுடன் மோதுகிறது. மகளிருக்கான 3X3 கூடைப்பந்து போட்டியில் ஏ பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் 14-19 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானிடம் தோல்வி அடைந்தது.

### ஜூடோ

ஜூடோவில் மகளிருக்கான 70 கிலோ எடைப் பிரிவில் கால் இறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் கரிமா சவுத்ரி, பிலிப்பைன்ஸின் ரியோகோ சாலினாஸிடம் தோல்வி அடைந்தார்.

### பிரணதி நாயக்

மகளிருக்கான ஆர்ட்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டியில் இந்தியாவின் பிரணதி நாயக், வால்ட் மற்றும் ஆல் ரவுண்ட் பிரிவில் 12.716 புள்ளிகள் குவித்து இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

### வுஷு

வுஷு போட்டியில் மகளிருக்கான 60 கிலோ எடைப்பிரிவு காலிறுதியில் இந்தியாவின் ரோஷிபினா தேவி, கஜகஸ்தானின் அய்மான் கே-யை ஒரு புள்ளி வித்தியாசத்தில் தோற்கடித்து அரை இறுதி சுற்றுக்கு முன்னேறினார். அரைஇறுதி சுற்றில் ரோஷிபினா தேவி தோல்வி அடைந்தாலும் வெண்கலப் பதக்கம் பெறுவார்.

# இந்திய விமானப் படையில் சி-295 ரக விமானம் சேர்ப்பு

**காஸியாபாத்**

ஸ்பெயினில் உள்ள ஏர்பஸ் நிறுவனம் இந்திய விமானப்படைக்காக சி-295 ரக விமானங்களைத் தயாரித்து அளிக்கவுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும், ஏர் பஸ் நிறுவனமும் கடந்த 2021-ல் கையெழுத்திட்டன.

இதைத் தொடர்ந்து ஸ்பெயினின் செவில் நகரிலுள்ள உற்பத்தி ஆலையில் விமானத்தை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. சி-295 வகையைச் சேர்ந்த 56 விமானங்களை இந்திய விமானப் படைக்கு அளிக்குமாறு அந்த ஒப்பந்தத்தில் கையெழுத் திடப்பட்டிருந்தது. இந்நிலையில் முதல் விமானம் 2 வாரங்களுக்கு முன்பு இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சி-295எம்டபிள்யூ ரக விமானமானது 5 முதல் 10 டன் எடையை சுமந்து செல்லும் திறன் படைத்தது. பாராசூட் குழுவினரை குறிப்பிட்ட இடத்தில் தரை இறக்குவதற்கும், சரக்குகளை தரை இறக்குவதற்கும் இந்த வகையிலான விமானங்கள் பயன்படும்.

இந்த விமானத்தை குறுகிய தூர ஓடுபாதையில் தரையிறக்கவும், மேலெழுப்பவும் முடியும். மேலும் இது தொடர்ச்சியாக 11 மணி நேரம் பறக்கும் சக்தி படைத்தது. இதுபோன்ற விமானங்கள் தற்போது அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், உக்ரைன், பிரேசில், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் மட்டுமே உள்ளன. தற்போது இந்தப் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.

இந்நிலையில் ஸ்பெயினில் தயாரான விமானம் கடந்த 5 நாட்களுக்கு முன்பு காஸியாபாத்திலுள்ள ஹிண்டன் விமானப் படை தளத்துக்கு வந்து சேர்ந்தது.

இதையடுத்து முறைப்படி விமானப் படையில் இந்த சி-295 ரக விமானத்தை ஒப்படைக்கும் நிகழ்ச்சி நேற்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் நடைபெற்றது.

இதற்காக விமானப்படை தளத்தில் சர்வதர்ம பூஜை நடைபெற்றது. நிகழ்ச்சியில் விமானப் படை தலைமை தளபதி வி.ஆர். சவுத்ரி, மூத்த அதிகாரிகள், ஏர் பஸ் நிறுவன அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த விமானம் தற்போது விமானப்படையின் 11-வது ஸ்குவாட்ரனில் சேர்க்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே பழமையான ஸ்குவாட்ரன்களில் இதுவும் ஒன்றாகும். இந்த ஸ்குவாட்ரனின் விமானப் படைத் தளமானது வதோதரா விமானப் படைத்தளத்தில் அமைந்துள்ளது.

இதேபோன்ற மேலும் 16 விமானங்களை ஏர் பஸ் நிறுவனம் 2025-ம் ஆண்டுக்குள் தயாரித்து வழங்கும். மேலும், 40 விமானங்களை இந்தியாவில் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் (டிஏஎஸ்எல்) நிறுவனமும், ஏர் பஸ் நிறுவனமும் இணைந்து அமைக்கவுள்ள ஆலையில் தயாராகும்.




உத்தரபிரதேச மாநிலம் காஸியாபாத்திலுள்ள ஹிண்டன் விமானப் படைத் தளத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சி-295 ரக விமானம் விமானப் படையில் சேர்க்கப்பட்டது. நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<u>நாட்டில் விற்பனையாகும்</u>

# 40 சதவீத மின்சார வாகனங்கள் தமிழகத்தில் தயாரித்தவை

**புதுடெல்லி**

மின்சார வாகனங்களை (இவி) அதிக அளவில் தயாரிப்பதில் தமிழகம் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது. நாட்டில் விற்பனை செய்யப்படும் மொத்த மின்சார வாகனங்களில் 40 சதவீதம் தமிழகத்திலிருந்து தயாரிக்கப்பட்டவை என்று மத்திய சாலைப் போக்குவரத்து துறை அமைச்சக வாகன் புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் கார் உள்ளிட்ட நான்கு சக்கர மின்சார வாகனங்களை தயாரிக்கும் 10 பெரிய நிறுவனங்கள் தமிழகத்தில் உள்ளன. வாகன் வலைதள புள்ளிவிவரத்தில், நடப்பாண்டு ஜனவரியில் இருந்து செப்டம்பர் 20 வரையில் நாடு முழுவதும் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் (ஆர்டிஓ) பதிவு செய்யப்பட்ட மின்சார வாகன எண்ணிக்கை 10,44,600-ஆக உள்ளது.

இதில் தமிழகத்தில் உள்ள ஆர்டிஓ அலுவலகங்களில் இருந்து மட்டும் பதிவான மின் வாகனங்களின் எண்ணிக்கை 4,14,802-ஆக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2025-க்குள் மின் வாகன தயாரிப் புக்காக ரூ.50,000 கோடி தமிழகத்தில் முதலீடு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2030-க் குள் இந்தியாவில் விற்பனையாகும் அனைத்து வகையான மின்சார வாகனங்களிலும் 30 சதவீத பங்களிப்பினை வழங்க தமிழகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.